# இலங்கை வெளிவிவகார அமைச்சர் இந்தியாவிற்கு வருகை (8-10 செப்டம்பர் 2017)

**செப்டம்பர் 09, 2017**

இலங்கை வெளிவிவகார அமைச்சர், மான்புமிகு திரு. திலக் மராபான, 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி இந்தியாவிற்கு ஒரு உத்தியோகபூர்வ விஜயம் செய்ய உள்ளார். அவர் தனது மனைவி மற்றும் மூத்த அதிகாரிகளோடு சேர்ந்து வருகை செய்ய உள்ளார். 2017 ஆகஸ்ட் 15 ம் திகதி வெளிவிவகார அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டதன் பின்னர் இதுவே அவரது முதல் வெளிநாட்டு பயணமாக அமையும்.

வெளிவிவகார அமைச்சர் திரு மராபான, பிரதமர் திரு மோடி அவர்களை இன்று சந்தித்து பேசினார். முன்னதாக வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் அவர்கள் விஜயம் செய்யும் இலங்கை அமைச்சர் மற்றும் அவருடன் சென்றிருந்த குழுவினை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இருதரப்பு உறவுகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான, நெருக்கமான மற்றும் நட்பு உறவை மேலும் ஆழமாக்குவதற்கான வழிகளைப் பற்றி இரு தரப்பினரும் விவாதித்தனர். வருகை தந்துள்ள அமைச்சரை கௌரவிக்கும் வகையில், வெளிவிவகார அமைச்சர் அவர்களுக்கு மதிய உணவு ஒன்றை வழங்கினார்.

**புது தில்லி**

**செப்டம்பர் 09, 2017**